8. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்ட முன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *1995 ஆம் ஆணடு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்ட முன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர்.*

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

9. வரவு-செலவுத் திட்டம், 1995-96—

பொதுவிவாதம்-தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *1995—96 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.*

நேற்றைய தினம் 10 உறுப்பினர்கள் பேசுவதாக இருந்ததில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 நிமிடங்கள் என்பதைக் கூடியமட்டும்